19.11.2024

அ.வ.எண். 529/2017

வாசா.3 - ஜனார்த்தனன்

2 முதல் 12ம் பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

நான் 10 வகுப்பு படித்துள்ளேன். நான் கோயம்புத்தூர் மத்திய கூட்டுறவு வங்கியில் வாட்ச்மேனாக கடந்த 6 மாதமாக பணியாற்றி வருகிறேன். அதற்கு முன்பு KVB வங்கியில் செக்யூரிட்டியாக 9 ஆண்டுகளாக பணியாற்றி வந்தேன். க.ச.எண்.118 ல் மொத்தம் விஸ்தீரணம் எவ்வளவு என்றால் 4.60 ஏக்கர். நான் வழக்கு சொத்தை நேரில் கிரயம் செய்யும்போதும், கடந்த வாரமும் சென்று பார்த்துள்ளேன். வழக்கு சொத்தில் எவ்வளவு HP மோட்டார் உள்ளது , எந்த நேரத்தில் யார் தண்ணீர் பாய்ச்சுவது என்று எனக்கு தெரியாது. பழனிச்சாமி தான் விவசாயம் செய்து வந்தார். 404/1967 பத்திரமானது கந்தசாமி குமாரர், கந்தசாமிக்கு பாத்தியப்பட்டதாக எழுதியுள்ளது அது பற்றிய விவரம் எனக்கு தெரியாது. அவர் சாட்சி கையொப்பம் இட அழைத்தார் அவ்வளவு தான் தெரியும். கந்தசாமி கவுண்டர் பெயரில் ஆவணம் இருந்ததா பற்றிய விவரம் எனக்கு தெரியாது. 884/2003 என்ற பதிவு செய்யப்பட்ட பத்திரத்தை எனது கையெழுத்து இதுதான் என்பதை காட்ட இந்நீதிமன்றததில் தாக்கல் செய்யவில்லை என்றால் ஆமாம்.

பொதுவாக ஒரு ஆவணம் எழுதும்போதும், அந்த சொத்தை பொறுத்து கடைசியாக என்ன ஆவணம் உள்ளதோ அந்த விவரத்தை தொடர்ந்து தான் அடுத்த ஆவணம் எழுதப்படும் என்றால் ஆமாம். வழக்கு சொத்தை பொறுத்து 884/2003 ஆவணத்திற்கு முந்தைய ஆவணம் 1779/1980 பாகப்பிரிவினை பத்திரம் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. பொதுவாக கிரயம் செய்த பின்னிட்டு யார் பெயரில் சொத்து வாங்கப்படுகிறதோ அவரிடமே அசல் ஆவணங்கள் ஒப்படைக்கப்படும் என்றால் ஆமாம். மற்றொரு கையொப்பம் செய்த

சிவசாமி, பழனிச்சாமியின் தங்கை கணவர். நான் பழனிச்சாமியின் பக்கத்து வீட்டுக்காரர். நான் எந்த ஆவணத்திலும் கையொப்பம் செய்யவில்லை என்றும், வழக்கிற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. அதனால் தான் என் கையொப்பத்தை காட்ட எந்த ஆவணமும் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கு சொத்தில் 2 ம் பிரதிவாதிதான் 2.30 ஏக்கரில் விவசாயம் மற்றும் அனுபவம் செய்து வருகிறார் என்றால் சரியல்ல. என் சாட்சியம் ஏற்றுகொள்ளகூடாது என்றால் சரியல்ல.

மேலும் குறுக்குவிசாரணை தொடர்ச்சிக்கு வேறு ஒரு தேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.

Sd/ஜனார்த்தனன்

Taken down by me to open court read over to the witness and acknowledged by her to be corrected.

Sd/Renuga
District Munsif,
Sulur